## வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
## பிறப்பிப்பவர்: திருமதி.த.மாலதி, பி.எஸ்.சி (நர்சிங்), எம்.ஏ.,

ந.க.அ2/E-2256461/2024 நாள்: 14.03.2025

பொருள்: பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி – வேலூர் மாவட்ட வருவாய் அலகு – நேரடி நியமன உதவியாளர் – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் (2019–2020, 2020–2021, 2021–2022, 2022–2023)–ல் அடங்கிய குரூப் – II தேர்வு (நேர்முக தேர்வு அல்லாதது) மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியில் சேர்ந்தவர்களை பணிவரன்முறை செய்து தகுதிகாண் பருவம் தொடங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடித எண்:1020/PSD-A2/2024, நாள்: 04.07.2024, 08.10.2024 மற்றும் 10.12.2024.
2. வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ2/E-2256461/2024, நாள்:24.07.2024, 13.11.2024 மற்றும் 31.12.2024.

*****

பார்வை 1–இல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் குரூப்–II (நேர்முக தேர்வு அல்லாதது) –இல் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலூர் மாவட்ட வருவாய் அலகில் நேரடி நியமன உதவியாளர்களாக நியமனம் செய்யப்படுவதற்காக, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திலிருந்து கடிதம் இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றது. பார்வை 2–இல் காணும் வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வுசெய்யப்பட்ட 27 நேரடி நியமன உதவியாளர்களுக்கு பணிநியமனம் வழங்கப்பட்டு தற்போது வரை பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் 24 நபர்களின் பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் உதவியாளர் பணியமைப்பில் வரன்முறை செய்தும் பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவம் துவக்கியும், இவர்களது தகுதிகாண் பருவம் மூன்று ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டுகாலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பணிபுரியும் அலுவலகம் | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 1. | ப.யோகேஸ்வரி | சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், நில எடுப்பு நெடுஞ்சாலைகள் (திட்டங்கள்) அலுவலகம், வேலூர். | 25.07.2024 முற்பகல் |
| 2 | உ.யுவராஜ் | வட்டாட்சியர் அலுவலகம், கீ.வ.குப்பம் | 30.07.2024 முற்பகல் |
| 3 | வி.ஈஸ்வரன் | வட்டாட்சியர் அலுவலகம், வேலூர். | 27.07.2024 முற்பகல் |
| 4 | க.ஜெய் கௌதம் | தனி வட்டாட்சியர் அலகு –II, நில எடுப்பு நெடுஞ்சாலைகள் (திட்டங்கள்) அலுவலகம், வேலூர். | 25.07.2024 முற்பகல் |
| 5 | ஐ.பிரியங்கா | மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம், வேலூர். | 25.07.2024 முற்பகல் |
| 6 | மு.ப.மோகன்குமார் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். | 25.07.2024 முற்பகல் |
| 7 | ச.ஹேமலதா | தனி வட்டாட்சியர் (ச.பா.தி), காட்பாடி. | 25.07.2024 முற்பகல் |
| 8 | க.கண்ணன் | வட்டாட்சியர் அலுவலகம், கீ.வ.குப்பம். | 25.07.2024 முற்பகல் |
| 9 | ர.சி.லோகேஷ்குமார் | வட்டாட்சியர் அலுவலகம், அணைக்கட்டு | 25.07.2024 முற்பகல் |
| 10 | பொ.திவ்யா | மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம், வேலூர். | 25.07.2024 முற்பகல் |
| 11 | கோ.ஐஸ்வர்யா | வட்டாட்சியர் அலுவலகம், வேலூர். | 26.07.2024 முற்பகல் |
| 12 | மோ.மனிஷா | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். | 25.07.2024 முற்பகல் |
| 13 | நா.விஜயசரவணகுமார் | மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர். | 25.07.2024 முற்பகல் |
| 14 | மா.சுகந்தி | தனி வட்டாட்சியர் (ச.பா.தி), வேலூர். | 26.07.2024 முற்பகல் |
| 15 | இரா.கீர்த்தனா | தனி வட்டாட்சியர் (ஆ.தி.ந), வேலூர். | 26.07.2024 முற்பகல் |
| 16 | ப. மகாலட்சுமி | வட்டாட்சியர் அலுவலகம், வேலூர். | 26.07.2024 முற்பகல் |

| | | | |
|---|---|---|---|
| 17 | எம். ராஜா முகமது | தனி வட்டாட்சியர் (ஆ.தி.ந), வேலூர். | 14.08.2024 முற்பகல் |
| 18 | பா.மகேந்திரன் | வட்டாட்சியர் அலுவலகம், காட்பாடி. | 25.07.2024 முற்பகல் |
| 19 | மு.விநாயகம் | தனி வட்டாட்சியர் (ஆ.தி.ந), குடியாத்தம். | 26.07.2024 முற்பகல் |
| 20 | ரா.மாயக்கண்ணன் | வட்டாட்சியர் அலுவலகம், அணைக்கட்டு. | 25.07.2024 முற்பகல் |
| 21 | மு.சிவகுரு | தனி வட்டாட்சியர் (ச.பா.தி), அணைக்கட்டு. | 26.07.2024 முற்பகல் |
| 22 | சி.ஜெகதீஸ்வரி | வட்டாட்சியர் அலுவலகம், வேலூர் . | 29.07.2024 முற்பகல் |
| 23 | த.கஸ்தூரி | வட்டாட்சியர் அலுவலகம், வேலூர். | 26.07.2024 முற்பகல் |
| 24 | அ.சக்திவேல் | தனி வட்டாட்சியர் (அலகு-3), நில எடுப்பு நெடுஞ்சாலைகள் (திட்டங்கள்), வேலூர். | 01.01.2025 முற்பகல் |

தமிழ்நாடு அமைச்சுப்பணிக்கான சிறப்பு விதி 38(B)(2)-ன் இணைப்பு 9-இல் தெரிவிக்கப்பட்டுள்ள விதி 8-ன் படி, மாவட்ட வருவாய் அலகில் நேரடி நியமன உதவியாளர்களாக பணிபுரியும் ஒவ்வொரும் அப்பணியமைப்பில் தகுதிகாண் பருவகால முடிவுக்குள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

I. பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இரண்டு மாத காலம் அடிப்படை பயிற்சி பெற்று பயிற்சி முடிவில் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

II. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறைத்தேர்வுகளான வருவாய்த்துறை பாகம் -1, பாகம் - 2 மற்றும் பாகம் - 3 ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

III. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வருவாய்த்துறை துறைத்தேர்வுகள் அனைத்திலும் தேர்ச்சி பெற்றவுடன் அடுத்து நடைபெறும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட பயிற்சி அணியில் நான்கு வார கால நில அளவை பயிற்சியும், ஒருவார கால நிலவரித்திட்ட பயிற்சியும் பெற்று பயிற்சி முடிவில் நடத்தப்படும் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3. வேலூர் மாவட்ட வருவாய் அலகில் பணிபுரியும் மேற்படி 24 நபர்களில் தகுதிகாண் பருவம் முடிப்பதற்கு நேரடி நியமன உதவியாளர்கள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் தகுதிகாண் பருவ முடிவுக்குள் மேற்படி அடிப்படை பயிற்சியனை பெற்றிருத்தல் வேண்டும். தகுதிகாண் பருவத்தில் உள்ள 24 நேரடி நியமன உதவியாளர்களும் தகுதிகாண் பருவ கால முடிவுக்குள்ள மேலே பத்தி-2 இல் I மற்றும் II -இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளையும் கண்டிப்பாக பெற்றிட வேண்டும். இவர்கள் அனைத்து வருவாய்த்துறைத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்று முடிந்தவுடன் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டப் பயிற்சிகள் அளிக்கவும் இவ்வலுவலகத்தில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே இவர்கள் அனைவரும் வருவாய்த்துறை தேர்வுகளில் தேர்ச்சி பெற்று உடனுக்குடன் தத்தமது அலுவலகத்தலைவருக்கு தெரிவித்து பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் செய்திடச் செய்யுமாறு அனைத்து நேரடி நியமன உதவியாளர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இப்பணிவரன்முறையானது சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் மதுரை பெஞ்ச் கோர்டில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டது.

4. இவர்களின் பணிவரன்முறைப்படுத்தப்பட்டது மற்றும் தகுதிகாண் பருவம் தொடங்கி ஆணையிடப்பட்டது போன்ற விவரங்கள் அனைத்தையும் அவர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து இவ்வலுவலகத்தில் அறிக்கையினை உடன் அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-வே.முத்தையன்,
மாவட்ட வருவாய் அலுவலருக்காக,
வேலூர்.

//ஆணைப்படி//

அலுவலக மேலாளர் (பொது)
17-03-25

பெறுநர்:-
சம்மந்தப்பட்ட நபர்கள் - சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மூலமாக
நகல் :
கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-05
நகல் : அனைத்து வட்டாட்சியர்கள்- இரட்டை நகலில் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு சார்வு செய்து நகலனுப்புக.
நகல் : கணக்கு பிரிவு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.
நகல்: அ2-இருக்கைக்கு.